## அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் --- 1 ( 2019 )

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ---------- என்பர்

அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க --------------- உதவுகிறது.

அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை

3. முதல் நிலைச் சந்தை -------- எனவும் அழைக்கப்படுகிறது

அ) இரண்டாம் நிலைச்சந்தை ஆ) பணச்சந்தை
இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகசந்தை

4. ஜி.எஸ்.டி. என்பது -------------------

அ) சரக்கு மற்றும் வெற்றி வரி
ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி
ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

5. கருவூல இரசீது ஆணை என்பது ---------- உடையது.

அ) அதிக நீர்மைத்தன்மை ஆ) குறைந்த நீர்மைத்தன்மை
இ) நடுத்தர நீர்மைத்தன்மை ஈ) வரையறுக்கப்பட்ட நீர்மைத்தன்மை

6. ------------- இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.

அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை
இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

7. புதிய பொருளாதாரக் கொள்கை ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது -----------------

அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

8. சரியான கூற்று எது?

   1. ஆவணம் மாற்றம் செய்பவர் மேலெழுதுநர்
   2. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1992
   3. பணச் சந்தை என்பது நிதிச்சந்தையின் உட்பிரிவாகும்.
   4. நம்பிக்கையற்ற ஊகவணிகர் கரடி

அ) 3 மட்டும் சரி ஆ) 1 மற்றும் 2 சரி இ) 3 மற்றும் 4 சரி ஈ) அனைத்தும் சரி



9. தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?

அ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி இ) இந்தியத் தலைவர் ஈ) மேல குறிபபிடப்பட்டவை அல்ல

10. பின்வருவனவற்றுள் எது முக்கிய செயல்பாடு அல்ல?

அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணிக்கமர்த்துதல்

11. மூலதனச் சந்தை ---------- ஐ வழங்குவதில்லை.

அ) குறுகியகால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

12. கூற்று ( A ) : பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தரமான மின்சார பொருட்களை மட்டுமே தயாரிக்கின்றனர்

காரணம் (R) : நுகர்வோர் தனது பட்டறிவுடன் ஐ.எஸ்.ஐ குறியீடு உள்ள மின்சார உபகரணங்களை பயன்படுத்துகின்றனர்.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு
ஈ) A தவறு ஆனால் R சரி

13. தவறான கூற்று எது?

அ) மனித வளம் என்பது ஒரு கண்ணுக்கு புலனாகா சொத்து.
ஆ) விளம்பரம் என்பது ஒரு புறவள ஆட்சேர்ப்பு வளமாகும்.
இ) சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் விற்பனையாளர்
ஈ) மின் வர்த்தக கடையை ஆன்லைன் கடை எனவும் அழைக்கலாம்.

14. ----------------- இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அ) டிஜிட்டல் இந்தியா ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
இ) ஸ்டாட்டப் இந்தியா ஈ) வடிவமைப்பு இந்தியா

15. தவறான பொருத்தம் யாது?

அ) உள்ளடக்க சந்தையிடுதல் --- திருப்தியடைந்த சந்தையிடுதல்
ஆ) பல்நோக்கு அளவு சந்தையிடுதல் ---- நெட்வொர்க் சந்தையிடுதல்
இ) பசுமை சந்தைபடுத்தல் ---- விவசாய சந்தைப்படுத்தல்
ஈ) பதுங்கியிருந்து சந்தைபடுத்தல் ---- அம்புஷ் சந்தைபடுத்தல்

16. குறிப்பிட்ட தலைப்பில் விரிவான கலைந்துரையாடல் ---------------

அ) ஆய்வின் கீழ்பயிற்சி ஆ) பயிற்சியளிப்பு இ) மாநாடுகள் ஈ) ஆலோசனை

17. பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

அ) விற்பனையாளர் ஆ) சந்தையிடுகையாளர் இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

18. கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?

அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

19. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏறப்படுத்த, ஒவ்வொரு ஆண்டும் ---------------------- நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்படடுள்ளது.

அ) ஆகஸ்டு 15 ஆ) ஏப்ரல் 15 இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15

20. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் --------------- க்கு பேச உரிமை இல்லை.

அ) தணிக்கையாளர் ஆ) பங்குநர் இ) பகராள் ஈ)இயக்குனர்

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. மேலாளர் என்பவர் யார்?
22. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் இரண்டினை குறிப்பிடுக.
23. நன்கு அமைக்கப்பட்ட துறைகளின் கூறுகள் யாவை?
24. தோற்றுவிப்பாளர் என்பவர் யார்?
25. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?
26. ஊக வணிகர்களின் வகைகள் யாவை?
27. மனித வளத்தின் பண்புகளில் ஏதேனும் இரண்டை குறிப்பிடுக.
28. கலப்படத்திறகு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
29. சிறப்பு கூட்டம் என்றால் என்ன?
30. இணைய வழி நேர்காணல் எந்த வகையான நேர்காணல் வகையைச் சார்ந்தது? அதன் பயன் யாது?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. கடன் பத்திரங்கள் என்றால் என்ன?
32. குறியிலக்கு மேலாண்மைக்கு வரைவிலக்கணம் தருக.
33. மனித வளம் மற்றும் மனித வள மேலாண்மைக்கு இடையே உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் மூன்று எழுதுக.
34. செபியின் மூன்று நோக்கங்களை எழுதுக.
35. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
36. எப்பொழுது மாற்று இயக்குனர்களை நியமிக்கலாம்?
37. பாதுகாப்பு உரிமை பற்றி நீவிர் புரிந்து கொண்டது என்ன?
38. தமிழக அரசின் தொழில் முனைவோர் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.
39. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?



40. பொது இடங்களில் புகைபிடிக்க கூடாது, தலைக்கவசம் அணியுங்கள் போன்ற வாசகத்துடன் பொருள்களை சந்தைப்படுத்துதல் எந்த வகையான சந்தைப்படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்? அதன் நோக்கம் யாது?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

தொழில் முனைவோரை வகைப்படுத்துக.

42. செபியின் பணிகளை விவரி.

( அல்லது )

மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.

43. மேலெழுத்தின் வகைகளை விவரிக்க.

( அல்லது )

தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக.

44. நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?

( அல்லது )

எப்போது நுகர்வோர் புகார் தொடுக்கலாம்?

45. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழுவின் செயல்பாடுகள் யாவை? ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

சந்தையிடுகையின் பரிணாமவளர்ச்சி பற்றி விவரி.

46. பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

ஒரு இயக்குனரின் பொது கடமைகள் யாது?

47. பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக.

( அல்லது )

விற்பனை மற்றும் விற்பனை ஒப்பந்தத்தை வேறுபடுத்துக.